# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் - 01.09.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 8701/SCIC/2025 & CP 1628/SCIC/2025**

திரு.C.P.கார்த்திக், சி.55203 - மேல்முறையீட்டாளர்
எண்.36/22, புதிய தலைமைச் செயலக காலனி
பிரதான சாலை, கீழ்ப்பாக்கம்
சென்னை - 600 010.
Phone:98843 27058.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
சென்னை பெருநகரக் காவல்
பள்ளிக்கரணை காவல் மாவட்டம்
மேலகோட்டையூர், சென்னை - 600 127.

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **01.03.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 21.05.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 05.04.2025 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 05.06.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 01/03/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ T-15, கண்ணகி நகர் காவல் நிலையம், சென்னை-97 அவர்களுக்கு அனுப்பி, அதில் “நான் புகார் அளித்து எனக்கு வழங்கப்பட்ட சி.எஸ்.ஆர்.எண்.887/2024 வழங்கிய புகாரின்படி எதிர்மனுதாரர்களாக எத்தனை பேர் இருக்கின்றனர் ? அவர்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசைப்படுத்தி சான்றிட்ட உண்மை நகலை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்” என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.C.P.கார்த்திக் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.D.கந்தன், காவல் உதவி ஆணையர், செம்மஞ்சேரி சரகம், சென்னை-73 அவர்கள் ஆஜரானார். மனுதாரர், தனது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 01/03/2025 நாளிட்ட மனுவின் அடிப்படையில் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினையும், புகார் மனுவினையும் அனுப்பியுள்ளார். **எனவே, புகார் மனு நிலைக்கத்தக்கதல்ல என ஆணையம் முடிவு செய்து, தள்ளுபடி செய்யப்படுகிறது.**

3. மனுதாரர், தனது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் CSR 887/2024 ஐ குறிப்பிட்டு சில விவரங்களையும், தான் 21/01/2024 அன்று கண்ணகி நகர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்களையும் அளிக்கக் கோரியுள்ளார் எனத் தெரிய வருகிறது. இது தொடர்பாக, 21/05/2025 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலரால் பதில் அளிக்கப்பட்டுள்ளதில் இனம் 4-க்கு மனுதாரரின் புகார் மனு கண்ணகி நகர் காவல் நிலையத்தில் மனு கிடைக்கப் பெறவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். இதனை மனுதாரர் ஆட்சேபித்ததோடு, தான் உண்மையில் புகார் மனு அனுப்பியுள்ளதாக வலியுறுத்தினார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரர் 21/01/2025 தேதியிட்டு, காவல் ஆணையர், தாம்பரம் காவல் ஆணையரகம், சோழிங்கநல்லூர், சென்னை-க்கு புகார் மனு அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. மனுதாரரின் முக்கியக் கோரிக்கையாக, தான் புகார் மனு அளித்திருந்தும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்பதுதான். இது குறை தீர் கோரிக்கையாகும். எனினும், பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி/ உதவி காவல் ஆணையர் அவர்களிடம் இன்று (01/09/2026) மனுதாரர் 21/01/2025 தேதியிட்டு அளித்திருந்த புகார் மனுவின் நகல் அளிக்கப்பட்டது. எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், பள்ளிக்கரணை காவல் மாவட்டம் அவர்கள் மேற்சொன்ன புகார் மனுவின் மீது சட்ட விதிமுறைகளின்படி விசாரணை நடத்துவதோடு, அது குறித்த விசாரணை அறிக்கை / தகவலினை மனுதாரருக்கு, இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

3. **மேலும், மனுதாரரின், சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான 05/04/2025 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு, அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திருமதி.மகேஸ்வரி, இ.கா.ப. (தற்போது இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், சென்னை-16 அவர்கள் எவ்வித பதிலும் அனுப்பவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்சொன்ன திருமதி.மகேஸ்வரி, இ.கா.ப., இயக்குநர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் - 2005, பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, தனது பிரதிநிதி வாயிலாக 30/09/2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.**

4. **மேலும், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 01/03/2025 தேதியிட்ட மனுவிற்கு உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் எவ்வித தகவல்களையும் அளிக்காமல் 21/05/2025 தேதியிட்டு மனுதாரருக்கு காலதாமதத்துடன் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. இனி வருங்காலங்களில், மனுதாரர்களின் தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005-ன் கீழான மனுக்களுக்கு உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் சரியான, முழுமையான தகவல்களை அளிக்க**

**வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், அச்சட்டத்தின்படியான நடவடிக்கையினை எதிர்கொள்ள நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.**

**5. காவல் ஆணையாளர், தாம்பரம் காவல் ஆணையரகம் அவர்கள் மனுதாரரின் 21/01/2025 தேதியிட்ட புகார் மனுவின் மீது, விதிமுறைகளின் கீழ் உரிய விசாரணை நடத்தப்பட்டு, அவ்விசாரணை அறிக்கை மனுதாரருக்கும், அதன் நகல் ஆணையத்திற்கும் அனுப்பப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 8701/SCIC/2025 & CP 1628/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
சென்னை பெருநகரக் காவல்
பள்ளிக்கரணை காவல் மாவட்டம்
மேலகோட்டையூர், சென்னை - 600 127.

2. காவல் ஆணையாளர்
தாம்பரம் காவல் ஆணையரகம்
Near ELCOT SEZ., SHOLINGANALLUR
KARAPAKKAM, CHENNAI.

3. திருமதி.மகேஸ்வரி, இ.கா.ப.
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
தற்போது இயக்குநர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்,
சென்னை-16.

**மேல்முறையீட்டாளர்**

திரு.C.P.கார்த்திக், சி.55203
எண்.36/22, புதிய தலைமைச் செயலக காலனி
பிரதான சாலை, கீழ்ப்பாக்கம்
சென்னை - 600 010.
Phone:98843 27058.

நகல்
1.காவல்துறை தலைமை இயக்குநர்
காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம்
மயிலாப்பூர், சென்னை-600 004.

2.பதிவாளர்
தமிழ்நாsடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/Sr.PC